11th December 1961]

THE HON. SRI C. SUBRAMANIAM : I do not think I can enter into speculation about that.

SRI S. M. ANNAMALAI : மதுவிலக்கு அமுல் நடத்துகிற மாநிலங்களில், அதனுல் ஏற்படுகிற நஷ்டத்தை மத்திய சர்க்கார் ஏற்றுக்கொள்வதாக அங்கு சொல்லியிருக்கிருர்களே, ஆனுல் இம் மாநிலம் குறித்து அந்நஷ்டத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என்று முன்பு ஒரு கேள்விக்கு கனம் அமைச்சர் அவர்கள் பதில் சொன்னுர்கள். அதையும் அவர்கள் ஏற்றுக்கொள்வதற்கு நிதிக் கமிஷன் சிபாரிசு செய்ய முன்வந்திருக்கிறதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்பிரச்னை நிதிக் கமிஷன் முன்னுல் வரவில்லை.

Educational concession to women

*2232 *Q*.—SRI V. K. KOTHANDARAMAN : கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஹரிஜன மக்களுக்கு கல்வி துறையில் என்னென்ன சலுகைகள் கொடுக்கப்படுகிறதோ அதுபோல் பெண்களுக்கும் கொடுக்க உத்தேசமுண்டா ?

(இ) விவரமென்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

SRI V. K. KOTHANDARAMAN : பெண்கள் படித்து முன்னேறுவது மூலமாகத்தான் நாடு முன்னேறமுடியும் என்று கனம் நிதியமைச்சர் அவர்களே பல கூட்டங்களில் பேசியிருக்கிருர்கள். அதேபோல் திரு. வி. க. போன்ற பல அறிவாளிகளும் புத்தகங்கள் எழுதியிருக்கிருர்கள். அப்படியிருக்க, பெண்கள் படித்து முன்னேறினுல் நாடு முன்னேற்றம் அடையுமே; ஆகவே, இதிலிருந்து நாடு முன்னேறக்கூடாது என்பது நோக்கமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதற்குப் பேர்தான் விதண்டாவாதம் என்று சொல்வது. "ஹரிஜன மக்களுக்கு கல்வித் துறையில் அளிக்கப்படுவது போன்ற சலுகைகள் பெண்களுக்கும் கொடுக்க உத்தேசமுண்டா" என்பது கேள்வி. இப்பொழுது பொதுவாக எல்லோருக்குமே 7, 8-வது வரை இலவசக் கல்வி கொடுக்கிறேம். அதற்கு மேல் 10-வது வரையில் ஏழைகளுக்கு இலவசக் கல்வி கொடுக்கிறேம். ஆகவே பெண்கள் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களாகயிருந்தால் அச்சலுகை அவர்களுக்குக் கிடைக்கும். சௌகரியம் உள்ளவர்கள் பெண்களை சம்பளம் கொடுத்து படிக்க வைக்க முடியும். ஆகவே சம்பளம் கொடுப்பதா இல்லையா என்பதல்ல பிரச்னை. ஆக, பெண்களை பெற்றேர்கள் பள்ளிகளுக்கு அனுப்பத் தயாராகயிருக்கவேண்டுமென்பதுதான் பிரச்னை. அதற்காகத்தான் அப்படிப் பிரசாரம் செய்யவேண்டியிருக்கிறது.

[11th December 1961

Sri K. VINAYAKAM : Since women are classified as weaker sections of the community, as weak as the backward classes, would the concessions now given to the backward classes, be given to all the women studying at the University level?

The Hon. Sri C. SUBRAMANIAM : I do not think women would now accept the classification that they belong to the weaker sex. That is the vanity of the male sex.

Sri C. NATARAJAN : ஹரிஜனங்களுக்கு அளிக்கப்படுகிற சலுகை, ஹரிஜன் அல்லாதார் ஒரு ஹரிஜனப் பெண்ணை திருமணம் செய்து கொண்டால் அவர்கள் ஹரிஜனங்கள் அல்ல என்று மறுக்கப்படுகிறதே. அப்படி திருமணம் செய்துகொண்ட பிறகும் அவர்களை ஹரிஜனங்கள் என்றே மதிக்கப்பட்டு இச்சலுகைகள் தரப்படுமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : கலப்பு மணம் பற்றி முன்னாலேயே விவாதித்திருக்கிறோம். கலப்புத் திருமணம் பற்றிய சட்டமுண்டு. யார் யாரை மணம் செய்து கொண்டால் அவர்கள் ஹரிஜனங்களாக இருப்பார்களா இல்லையா என்பதற்கு சட்டமுண்டு. இக்கேள்வியில் அது எழவில்லை.

Sri S. RAMALINGA PADAYACHI : மார்க் அடிப்படையில், 45 மார்க்ஸ் இருந்தால் படிப்புக்கு உதவித் தொகை கொடுக்கலாம் என்ற திட்டத்தைக் கொண்டுவர கனம் அமைச்சர் அவர்கள் முயற்சிப்பார்களா ? (பதில் இல்லை)

Sri A. A. RASHEED : Is it not against the Constitution to make discrimination between men and women?

The Hon. Sri C. SUBRAMANIAM : The hon. Member can discriminate in favour of women.

Sri V. K. KRISHNAMURTHY : தலைவர் அவர்களே, வர்க்கப் பிரிவினையைத் தோற்றுவிப்பதுபோல் பால் பிரிவினையைக்கூட தோற்றுவிக்கிறார்களே, இதை அரசாங்கம் நீடிக்குமா ? அல்லது ஒடுக்குமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : இது அரசாங்கத்தின் பொறுப்பல்ல. மக்கள் எப்படிச் செய்கிறார்களோ அதைப் பொறுத்திருக்கிறது. இன்று, 51 சதவீதம் பெண்கள்தான். ஆகவே அவர்களை ஒதுக்கி வைப்பது என்பது முடியாத காரியம். இன்று இரு பாலாரும் முன்னுக்கு வரவேண்டுமென்பதுதான் சர்க்கார் கொள்கை.

Sri V. K. KOTHANDARAMAN : கலப்புத் திருமணம் செய்து கொள்ளக்கூடியவர்களுக்கு பிறக்கக்கூடிய குழந்தைகளை எந்த ஜாதியில் சேர்ந்தவர்கள் என்று கணக்கு எடுக்கப்படுகிறது ? தகப்பன் ஜாதியைச் சேர்ந்தவர்கள் என்று கணக்கு எடுக்கப் படுகிறதா ? அல்லது தாய் ஜாதியைச் சேர்ந்தவர்கள் என்று கணக்கு எடுக்கப்படுகிறதா ?

DEPUTY SPEAKER : I disallow this question.